காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022

பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

நேரம் : 3.00 மணி

கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள் : 90

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20 x 1 = 20

1. பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் முதன்மை நோக்கம் ஆகாது?
   அ) நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்தல்
   ஆ) வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அறிந்து கொள்ளுதல்
   இ) நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளுதல்
   ஈ) வரி விதிக்கும் அதிகாரிகளிடம் வரி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்
2. பின்வருவனவற்றில் எது கணக்கியலின் பிரிவுகளில் இடம் பெறாது?
   அ) நிதிநிலைக் கணக்கியல் ஆ) மேலாண்மைக் கணக்கியல்
   இ) மனித வளக் கணக்கியல் ஈ) மேற்கண்ட ஏதுமில்லை
3. GAAP என்பது
   அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
   ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
   இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்
   ஈ) இவற்றுள் ஏதுமில்லை
4. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு வணிக நிறுவனம் கடன் பட்டிருக்கிறது என்பதை கூறும் கருத்து
   அ) பண மதிப்பீட்டுக் கருத்து ஆ) அடக்கவிலை கருத்து
   இ) வணிகத்தனித்தன்மை கருத்து ஈ) இரட்டைத்தன்மை கருத்து
5. இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
   அ) இந்திய மைய வங்கி
   ஆ) இந்திய அடக்க விலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
   இ) உச்சநீதிமன்றம் ஈ) இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம்
6. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ரூ.1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ரூ.60,000 எனில் அந்நிறுவனத்தின் முதல் ______.
   அ) ரூ.1,60,000 ஆ) ரூ.60,000 இ) ரூ.1,00,000 ஈ) ரூ.40,000
7. முன்கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு
   அ) பெயரளவு கணக்கு ஆ) ஆள்சார் கணக்கு
   இ) சொத்துக் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
8. உரிமையாளரால் வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) எடுப்புகள் கணக்கு ஆ) ரொக்கக் கணக்கு
   இ) முதல் கணக்கு ஈ) கொள்முதல் கணக்கு
9. ஒரு கணக்கில் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
   அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு
   இ) இருப்பு இன்மை ஈ) பற்று மற்றும் வரவு இருப்பு
10. கு.ப.எ. என்பது
    அ) பேரேட்டு பக்க எண் ஆ) குறிப்பேட்டு பக்க எண்
    இ) சான்று சீட்டு எண் இ) ஆணை எண்
11. இருப்பாய்வு என்பது ஒரு
    அ) அறிக்கை ஆ) கணக்கு இ) பேரேடு ஈ) குறிப்பேடு
12. பின்வரும் எந்த முறை அல்லது முறைகளில் இருப்பாய்வு தயாரிக்கப்படுகிறது?
    அ) இருப்பு முறை ஆ) மொத்தத் தொகை முறை
    இ) மொத்தத் தொகை முறை மற்றும் இருப்பு முறை
    ஈ) (அ), (ஆ) மற்றும் (இ)

13. இருப்பாய்வில் பற்றுப் பகுதியின் மொத்தமும், வரவுப் பகுதியின் மொத்தமும் வேறுபட்டால் அதை அடுத்து எழுத வேண்டிய கணக்கு
அ) வியாபார கணக்கு
ஆ) வேறுபாட்டு கணக்கு
இ) அனாமத்து கணக்கு
ஈ) இதர கணக்கு
14. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது
அ) அனைத்து சரக்குகளின் கொள்முதல்
ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் கொள்முதல்
இ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல்
ஈ) அனைத்து சொத்துக்களின் கொள்முதல்
15. விற்பனை ஏட்டில் பதிவு செய்வதற்கு பயன்படும் அடிப்படை ஆவணம்
அ) பற்றுக் குறிப்பு ஆ) வரவு குறிப்பு இ) இடாப்பு ஈ) ரொக்க இரசீது
16. ரொக்க ஏடு என்பது இ
அ) துணை ஏடு
ஆ) முதன்மை ஏடு
இ) உரிய குறிப்பேடு
ஈ) துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்
17. கீழ்க்கண்டவற்றில் எது எதிர்ப்பதிவாக பதிவு செய்யப்படும்
அ) சொந்த செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
ஆ) அலுவலக செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
இ) வாடிக்கையாளர், நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்திய தொகை
ஈ) வங்கி எடுத்துக்கொண்ட வட்டி
18. சிறிய செலவினங்களைப் பதியும் ஏடு
அ) ரொக்க ஏடு
ஆ) கொள்முதல் ஏடு
இ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு
ஈ) சில்லறை ரொக்க ஏடு
19. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது
அ) வங்கி அறிக்கை
ஆ) ரொக்க ஏடு
இ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி
ஈ) சில்லறை ரொக்க ஏடு
20. வங்கி அறிக்கை என்பது
அ) ரொக்க ஏட்டின் ரொக்கப்பத்தியின் நகல்
ஆ) ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தியின் நகல்
இ) வங்கிப் புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்
ஈ) வணிகத்தால் விடுவிக்கப்பட்ட காசோலையின் நகல்

பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய் வினா) 7 x 2 = 14

21. கணக்கியலை வரையறு?
22. நிறுவன தொடர்ச்சி அனுமானம் குறித்து சிறுகுறிப்பு வரைக.
23. வங்கி மேல்வரைப்பற்று என்றால் என்ன?
24. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?
25. பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மனோகர் அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

2020			ரூ.
மார்ச்	1	மனோகா வியாபாரம் தொடங்க கொண்டு வந்த ரொக்கம்	60,000
	16	வாடகை செலுத்தியது	500
	17	ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம்	8,000
	19	சொந்தப் பயன்பாட்டிற்காக பணம் எடுத்தது	4,000

26. பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கை தயாரிக்கவும்.

2019			ரூ.
ஜன	1	கையில் உள்ள அறைகலன்	2,000
	1	அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது	4,000
	30	அறைகலன் விற்றது	400

27. இருப்பாய்வு என்றால் என்ன?

28. பின்வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுக.
அ) ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ஆ) கடனுக்கு சரக்கு விற்றது
இ) கடனுக்கு சரக்கு வாங்கியது ஈ) கடனுக்கு சொத்துகள் வாங்கியது

29. பின்வரும் விவரங்களிலிருந்து ஜெயக்குமார் என்பவரின் 20 21 டிசம்பர் 31ஆம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார் செய்க.
a) ரொக்க ஏட்டின்படி இருப்பு ரூ.7,130
b) செலுத்திய காசோலை வசூலாகாதது ரூ.1,000
c) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ரூ.800

30. வங்கி அறிக்கையின்படி இருப்பு ரூ.1,000, செலுத்திய காசோலை வங்கியால் இன்னும் வரவு வைக்கப்பட்டாதது ரூ.2,000. ரொக்க ஏட்டில் வங்கிப் பத்தியின் இருப்பு எவ்வளவு?

பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21

31. இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

32. கணக்கியல் தரநிலைகள் குறித்து சிறுகுறிப்பு வரைக.

33. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக.

	சொத்துகள் ரூ.	=	*முதல் ரூ.*	+	*பொறுப்புகள் ரூ.*
a)	2,00,000	=	1,50,000	+	?
b)	1,00,000	=	?	+	30,000
c)	?	=	1,20,000	+	80,000

34. குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து ரொக்க கணக்கில் எடுத்து எழுதுக.

2021			ரூ.
ஜூன்	1	ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது	1,10,000
	10	கூடுதல் முதல் இட்டது	50,000
	28	சொந்த செலவுக்கு ரொக்கம் எடுத்துக்கொண்டது	20,000

35. கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம்பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டு.
i) வெளித்தூக்குக் கூலி ii) கொள்முதல் iii) வட்டிப் பெற்றது
iv) எடுப்புகள் v) விற்பனை vi) முதல்

36. பின்வரும் நடவடிக்கைகளை மோகன் & கோ நிறுவனத்தின் விற்பனை ஏட்டில் பதிக.
2020
ஆகஸ்டு 1 இடாப்பு எண்.68 ன்படி செந்திலுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ரூ.23,000
ஆகஸ்டு 4 இடாப்பு எண் 74ன்படி மணி என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது ரூ.10,500
ஆகஸ்டு 8 சுரேஷ் என்பவருக்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ரூ.6,500
ஆகஸ்டு 25 கமலா என்பவருக்கு கடனுக்கு விற்றது
10 மேசைகள் ஒன்று ரூ.1,500 வீதம்
20 நாற்காலிகள் ஒன்று ரூ.200 வீதம்

37. முப்பத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக.

38. 2020 மே மாதத்திற்கான சேஷாத்ரி அவர்களின் பின்வரும் நடவடிக்கைகளை தனிப்பதி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

2020			ரூ.
மே	1	கையிருப்பு ரொக்கம்	40,000
	5	ஸ்வாதியிடமிருந்து பெற்ற ரொக்கம்	4,000
	7	கூலி ரொக்கமாகக் கொடுத்தது	2,000
	10	சசிகலாவிடமிருந்து ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது	6,000
	15	ரொக்கத்திற்கு விற்பனை செய்தது	9,000
	18	கணிப்பொறி வாங்கியது	15,000

39. வங்கிச் சரிக்கட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களை தருக?

40. "பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்" - விவரி?

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) ஆட்டோமொபைல் நிறுவனம் நடத்தும் இராணியின் ஏடுகளில் பின்வரும் விபரங்களை கணக்கியல் சமன்பாட்டின் படி பதிவு செய்க.

		ரூ.
i)	ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது	80,000
ii)	ரமேஷிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது	10,000
iii)	ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது	6,000
iv)	கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம்	8,000
v)	ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது	2,000

(அல்லது)

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை இராஜா ஹோட்டலின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

			ரூ.
ஜனவரி	1	ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது	3,00,000
	2	ராஜுவிடமிருந்து கடன் கொள்முதல் செய்தது	1,00,000
	3	வங்கியில் ரொக்கம் செலுத்தியது	2,00,000
	20	வங்கியில் கடன் பெற்றது	1,00,000
	31	அறக்கட்டளை அமைப்பிற்கு மதிய உணவு இலவசமாக வழங்கியது	1,000

42. அ) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாகப் பேரேட்டில் எடுத்து எழுதவும்.

2020			ரூ.
ஜூன்	1	ராஜா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது	50,000
	6	ரொக்கத்திற்கு சரக்கு விற்றது	8,000
	8	தேவி என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது	9,000
	15	ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது	4,000
	20	சாந்தி என்பவரிடம் கடனாக சரக்கு வாங்கியது	5,000

(அல்லது)

ஆ) சந்திரமோகன் என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு 31.3.2017ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயார் செய்க.

	ரூ.		ரூ.
முதல்	1,24,500	வங்கி மேல்வரைப்பற்று	5,800
எடுப்புகள்	2,000	மகிழுந்து	20,000
பெற்ற கடன்	7,000	பொதுச் செலவுகள்	2,500
விற்பனை	53,400	கட்டடம்	1,10,000
கொள்முதல்	40,000	சரக்கிருப்பு	16,200

43. அ) பின்வரும் நடவடிக்கைகளை கணேசன் என்பவரது ஏடுகளில் குறிப்பேட்டில் பதிவு செய்து பேரேட்டுக் கணக்குகளிலும் எடுத்து எழுதுக.

2021			ரூ.
அக்.	1	தொழில் ரொக்கத்துடன் தொடங்கியது	25,000
	5	வங்கியில் ரொக்கம் செலுத்தியது	12,500
	10	அறைகலன் வாங்கி காசோலை கொடுத்தது	2,000
	15	ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது	5,000
	19	வாசு என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது	4,000
	22	சொந்த பயனுக்காக சரக்குகள் எடுத்துக்கொண்டது	500

(அல்லது)

ஆ) ரொக்கத் தள்ளுபடிக்கும், வியாபார தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக?

44. அ) பின்வரும் நடவடிக்கைகளை மின் சாதனங்களை விற்பனை செய்யும் சுபஸ்ரீ மின்பொருள் நிறுவனத்தின் கொள்முதல் ஏட்டில் பதிவு செய்க.

2020

April 5 கார்த்திக் மின்பொருள் நிறுவனத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது
10 மின் தேய்ப்பான் ஒன்று ரூ.2,500 வீதம்
5 மின்சார அடுப்புகள் ஒன்று ரூ.2000 வீதம்

April 19 கேதான் மின் பொருளகத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது
3 மின்சார நீர் சூடேற்றி ஒன்று ரூ.6,000 வீதம்

April 25 போலார் மின்பொருள் விற்பனையகத்திடம் கடனுக்கு வாங்கியது
10 மின் விசிறிகள் ஒன்று ரூ.2,000 வீதம்

April 29 M நிறுவனத்திடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது
10 மின்சா அடுப்புகள் ஒன்று ரூ.3,000 வீதம் ***(அல்லது)***

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து முன்பண மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டை தயாரிக்கவும்.

2020			ரூ.
ஜனவரி	1	சில்லறை செலவுகளுக்காக ரொக்கம் பெற்றது	500
	2	பயண செலவுக்கு கொடுத்தது	5
		வண்டிக்கட்டணம் கொடுத்தது	12
	3	தபால் செலவு செய்தது	15
		தற்காலிக வேலையாட்களுக்கு கூலி கொடுத்தது	66
	4	எழுதுபொருள் வாங்கியது	134
		போக்குவரத்து செலவுக்கு கொடுத்தது	18
	5	பழுதுபார்ப்பு செலவு செய்தது	65
		பேருந்து கட்டணம் செலுத்தியது	11
		வண்டிக்கட்டணம் கொடுத்தது	24

45. அ) பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.

i) வங்கி ii) வெளி ஏற்றுச்செல் செலவு iii) கொள்முதல்
iv) ஹரிஷ் v) முன்கூட்டி செலுத்தியது செலவு vi) அறைகலன்
vii) நற்பெயர் viii) விற்பனை ix) வட்டி பெற்றது
x) முதல் ***(அல்லது)***

ஆ) 2020 மார்ச் 31ஆம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலைத் தயார் செய்து ரொக்க ஏட்டின் படியான இருப்பினைக் கண்டறிக.

	விபரம்	ரூ.
i)	வங்கி அறிக்கையின்படியான வங்கி இருப்பு	15,000
ii)	விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது	2,500
iii)	வங்கிக் கட்டணம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை	250
iv)	வங்கியால் பற்று செய்யப்பட்ட வட்டி ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை	500
v)	நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய காப்பீட்டு முனைமம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை	300
vi)	செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது	900

46. அ) ஆனந்த் என்பவரின் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதிவு செய்யவும்.

2021			ரூ.
Dec	1	கைவச ரொக்கம்	19,500
	4	ரொக்கத்திற்கு சரக்கு விற்றது	32,000
	5	காந்தியிடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது	20,000
	9	கோபுவிடம் பெற்றது	11,800
		அவருக்கு அளித்த தள்ளுபடி	200
	15	மின்கட்டணம் ரொக்கமாக செலுத்தியது	12,500

17	ரொக்கம் செலுத்தி கணிப்பொறி மற்றும் அதன் இதர பாகங்களை வாங்கியது	16,800
25	காந்திக்கு ரூ.19,700 செலுத்தி அவர் கணக்கு முழுவதையும் தீர்த்துக் கொண்டது.	
28	திருவேங்கடத்திடம் ரொக்கம் பெற்றது	8,900
	அவருக்கு அளித்த தள்ளுபடி	100
30	வியாபார செலவுகளை ரொக்கமாக செலுத்தியது	3,500

(அல்லது)

ஆ) கல்யாணசுந்தரம் என்பவரின் முப்பத்தி ரொக்க ஏட்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை பதிவு செய்க.

2021			ரூ.
ஜன்	1.	ரொக்க இருப்பு	42,500
		வங்கி இருப்பு	35,000
	3	ரொக்க விற்பனை மூலம் பெற்ற தொகை	15,700
	4	வங்கியில் ரொக்கம் செலுத்தியது	11,500
	6	ரொக்க கொள்முதல்	14,300
	9	மின்னணு தீர்வை முறையில் வங்கி நேரடியாக பங்காதாயம் பெற்றது	2,000
	10	பொங்கல் முன்பணம் பணியாளர்களுக்கு வங்கி மூலம் செலுத்தியது	17,000
	12	நாகராஜனிடமிருந்து ரொக்கம் பெற்றது	11,850
		அவருக்கு அளித்த தள்ளுபடி	150
	17	மகேஸ்-க்கு கொடுக்க வேண்டிய ரூ.20,000த்தில் ரூ19,700 செலுத்தி அவர் கணக்கு தீர்க்கப்பட்டது.	
	20	சொந்த செலவுகளுக்காகப் பணம் எடுத்துக்கொண்டது	20,000
	30	தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மூலம் அலுவலக செலவுகளுக்கு பணம் எடுத்தது	1,500

47. அ) குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக். ***(அல்லது)***

ஆ) பின்வரும் குறிப்பேட்டு பதிவுகளில் விடுபட்ட தகவல்களை நிரப்புக.

செப். 2020	விவரம்	பே.ப எண்	பற்று ரூ.	வரவு ரூ.
1.	------------------------------------ ---------------------------- (ஜெயசீலி ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது)		80,000	
2.	------------------------------------ ---------------------------- (வங்கயில் ரொக்கம் செலுத்தியது)			40,000
3.	------------------------------------ ---------------------------- (ரொக்க கொள்முதல் செய்தது)			5,000
4.	------------------------------------ ---------------------------- (ரொக்கத்திற்கு விற்பனை செய்தது)			11,000
5.	------------------------------------ ---------------------------- (சம்பளம் வழங்கியது)		5,000	

******